10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 145 திங்கட்கிழமை ஒக்ரோபர் 16 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## வடக்கு, கிழக்கை நாம் எழுதிக் கொடுக்கவில்லை



காத்தான்குடி, ஒக். 16

"வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு தெரிவித்து எழுதிக் கொடுக்கவில்லை." எனத் தெரிவித்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்விடயத்தில் முஸ்லிம்கள் மத்தியில் தேவையில்லாத பீதியை கிளப்ப வேண்டாம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காத்தான்குடியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக இன்று நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய அவர், "வடக்கு, கிழக்கு இணைப்பு அல்லது

07

## அரசியல் கைதிகள் விவகாரம்

# 72 மணித்தியாலத்தில் தீர்வு!



யாழ்ப்பாணம். ஒக். 16

"அரசியல் கைதிகள் பிரச்சினைக்கு என்னால் 72 மணித்தியாலத்துள் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியும். வெளியிலிருந்து என்னை விமர்சிக்கும் சிலர் தங்கள் அற்ப அரசியல் சுயநலன்களுக்காக அரசியல் கைதிகள் இறந்துவிடுவதையே விரும்புகின்றனர்" எனத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். கே.சிவாஜிலிங்கம்.

21 நாட்களாக உண்ணாவிரதமிருந்துவரும் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் நேற்று மாலை வடக்கு மாகாண ஆளுநரரை சிவாஜிலிங்கம் சந்தித்தார்.

07



## பெண்களைத் தேடும் கூட்டமைப்பு

கொழும்பு - ஒக்.16

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான பெண் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணிகளை தாம் ஆரம்பித்துவிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், குழுக்கள் 25 வீதம் பெண் வேட்பாளர்களை உள்ளடக்க வேண்டும் என்ற புதிய சட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"சட்டத்தின் தேவைகளுக்கு அமைய நாங்கள் செயற்படுவோம். பெண்களுடன் இணைந்து நாங்கள் பணியாற்றுகிறோம். வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு அவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின், பெண்கள் அமைப்புகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் தலைமை தாங்கும் பெண்களில் இருந்து தெரிவு செய்வோம்" என்றார்.

எனினும் கடந்த தேர்தல்களில்

07

## கலாமின் பிறந்ததினம் யாழில் நேற்று



● கலாமுக்கு மாலையிடும் நடராஜனும் மனைவியும்



● தூதருக்குப் பக்கத்தில் பவ்வியமாக சி.வி.கேயும், சுரேஸூம்

யாழ்ப்பாணம், ஒக். 16

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமான ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் 86 ஆவது பிறந்த தினம் இன்று யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டது.

யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். பொதுநூலகக்

07

## சிவாஜி செய்த வேலை!

யாழ்ப்பாணம், ஒக். 16

உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான ம.சுலக்சனின் தாயார் மற்றும் சகோதரியை வடக்கு மாகாணசபை உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம், யாழ். இந்துவில் நடைபெற்ற தேசிய தமிழ் விழாவுக்கு நேற்று மாலை அழைத்துவந்தார்.

அங்கு அவர் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் சுலக்சனின் தாயாரை அறிமுகம் செய்துவைத்து சொற்பநேர உரையாடிய பின்பு அவர்களை அழைத்துச் சென்றுவிட்டார்.

"ஏன் அவர்களை பொது மேடைக்கு அழைத்து வந்தீர்கள்?" எனக் கேட்ட போது சிவாஜி அதற்கு எந்தப் பதிலும் வழங்காமல், தான் நிகழ்வுக்கு வந்தது தொடர்பில் மட்டுமே பதிலளித்தார். (எ)

## "இலங்கை பௌத்த நாடல்ல"



யாழ்ப்பாணம் - ஒக்.15

இலங்கை பௌத்த நாடல்ல எனத் தெரிவித்திருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பன்னெடுங் காலமாக இலங்கையின் நிலப்பரப்பு யாழ்ப்பாண இராஜ்யம், கண்டிய இராஜ்யம், உருகுணு இராஜ்யம் மற்றும் கரையோர இராஜ்யம் என்று பல இராஜ்யங்களாக வெவ்வேறாக ஆளப்பட்டு வந்துள்மையே உண்மையான விடயம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சரின் வாராந்த கேள்வி பதில் அறிக்கையில், "இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை நீங்கள் நிராகரிக்கின் றீர்களா?" என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நிர்வாக சீரமைப்பு என்ற பெயரில் ஆங்கிலேயர் 1833ம் ஆண்டு சகல இராஜ்யங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முழு இலங்கைக்கென ஒரு தனி நிர்வாக அலகை உண்டாக்கினார்கள். இதனால் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக இருந்த மக்கள் முழு இலங்கையிலும் சிறுபான்மையினர் ஆனார்கள். ஆனார்கள் என்பதிலும் பார்க்க ஆக்கப்பட்டார்கள் என்பதே உண்மை.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது குறிப்பிட்ட சில பௌத்த வணக்கஸ்தலங்களை விட வேறெங்கும் பௌத்த கோயில்களோ, விகாரைகளோ இருக்கவில்லை. இப்பொழுது இராணுவ அனுசரணையுடன் பௌத்த வணக்கஸ்தலங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு வருகின்றன. பௌத்தர்கள் இல்லாத இடங்களில் எல்லாம் அவை எழும்புகின்றன.

07

## கடைக்குச் சென்ற சிறுமிக்கு நேர்ந்த கதி

முல்லைத்தீவு - ஒக்.16

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் எட்டு வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்க முயன்ற 48 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு பகுதியில் வசித்து வரும் எட்டு வயதுடைய சிறுமி ஒருவர் கடை ஒன்றுக்கு மண்எண்ணைய் வாங்க சென்றுள்ளார். இந்நிலையில் கடையின் உரிமையாளர் மண் எண்ணைய் வீட்டில்தான் இருக்கின்றது என வீட்டுக்கு சிறுமியினை அழைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்க முயன்றுள்ளார். எனினும் குறித்த நபரிடம் இருந்து தப்பிய சிறுமி தனக்கு நடந்தவற்றை அவரது தாயாருக்குத் தெரிவித்துள்ளார். தாயார் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தமிழ் மொழித்தினத்தில் விருது பெற்றவர்கள்








# கைதிகளின் உறவினர்கள் ஆளுநரைச் சந்தித்தனர்



அனுராதபுரச் சிறைச்சாலையில் உண்ணா விரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடினர்.

மதியரசன் சுலக்சனின் தாயார் மற்றும் சகோதரி, இராசதுரை திருவருளின் மனைவி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், சிவன் அறக்கட்டளையின் நிறுவுனர் கணேஷ் வேலாயுதம், சிவன் அறக்கட்டளையின் இணைப்பாளர் சதீஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று 20 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (உ)

# வாந்தி எடுத்த மாணவன் திடீர் சாவு



மாங்காய் உண்டதால் வாந்தி எடுத்த மாணவன் ஒருவன் வைத்திய சாலைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளான்.

முழங்காவில் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 13 வயதுடைய கிருஷ்ணசாமி கோவரசன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். மாங்காய் உண்டதால் வாந்தி எடுத்ததாக குறித்த மாணவன் முழங்காவில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு வைத்தியர் கடமையில் இல்லாததால் கிளிநொச்சி வைத்தியாலைக்கு கொண்டு சென்ற வழியிலேயே மாணவன் உயிரிழந்துள்ளான். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
திங்கள், 16 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# இது உங்களின் குரல்

எதிரொலியின் பயணத்தின் இன்னொரு தடம் இது.

2017 மே முதலாம் திகதி முதல் தினமும் மாலையில் உங்கள் கரங்களில் தவழ்ந்த 'எதிரொலி' இன்றிலிருந்து, காலைத் தினசரியாக நிலைமாற்றம் பெற்றுள்ளது. அன்றைய செய்திகளை அன்றைக்கே மக்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கோடுதான், ஈழத்தின் முதலாவது மாலைத் தமிழ்த் தினசரியாக 'எதிரொலி' பிறப்பெடுத்திருந்தது.

ஆயினும் சிலபல காரணங்களால் அந்த நோக்கை முழுமையாக எட்டுவதில் பெரும் இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே அவற்றைத் தவிர்த்து, எதிரொலியின் இருப்பைத் தக்க வைக்க , காலைத் தினசரியாக மாற வேண்டிய நிர்ப்பந்தத்தை காலம் எமக்கு விதித்தது. வீம்பாக நின்று வீழ்வதை விடவும், விவேகமாக சில மாற்றங்களைச் செய்து என்றென்றைக்கும் தமிழரின் உரிமைக்கான உண்மைக் குரலாக எதிரொலியை, திக்கெட்டும் அதிரச் செய்யவேண்டுமென்பதற்காக, காலை நாளிழாக 'எதிரொலி' மாற்றம் பெற்றுள்ளது. ஆயினும் எமக்கான இருப்பு நிரந்தரத்துவத்தை எட்டியதும், நிச்சயமாக மீண்டும் மாலையிலும் எதிரொலி உங்கள் கரங்களில் கிடைக்கும். இவையெல்லாமே வாசகர்களினதும், விளம்பரதாரர்களினதும், விற்பனையாளர்களினதும், விநியோகஸ்தர்களினதும், எமது பணியாளர்களினதும் கைகளிலேயே உள்ளன.

இன்னுமொரு விடயத்தையும் இந்தவேளையில் பதிவு செய்யவேண்டிய கடப்பாடு எதிரொலிக்கு உண்டு. எதிரொலியின் பின்னணி பற்றி பல ஊகங்கள் உலவுகின்றன.

"அவர் பின்னால் நிற்கிறார்"

" இவரின் காசில் தான் எதிரொலி வெளிவருகிறது"

" அந்தப் பேப்பரின் இன்னொரு பேப்பர் தான் எதிரொலி"

–என்பன போன்ற கதையாடல்கள் சிலர் மத்தியில் இன்னும் உலவியபடியே இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் முற்றுமுழுதான கற்பனையின் நீட்சிகள் மட்டுமே. யார், யாருடைய பின்னணியில் எதிரொலி வெளிவருவதாகச் சொல்லப்பட்டதோ, சொல்லப்படுகிறதோ அவர்களுக்கும் எதிரொலிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் பதிவு செய்கின்றோம்.

முற்றுமுழுதாக, தன்னார்வமும், ஊடக நேசிப்பும், உண்மை மீதான விசுவாசிப்பும் கொண்ட , அரசியல் சாயமற்ற ஒரு சிலரின் கைக்காசிலேயே 'எதிரொலி' வெளிவருகின்றது. இதைத்தவிர வேறெந்தப் பின்புலமும் எமக்கில்லை.

மாலையில் 'எதிரொலி' வந்தபோது, 'பின்னேரப் பேப்பர்' பண்பாடு நம்மத்தியில் இருக்கவில்லை. அப்படியிருந்தும் கூட, பலர் எமக்கு ஆதரவளித்திருந்தனர். அந்த நல்லுள்ளங்களும்,மக்களும் காலையில் வெளிவருகையிலும் எம்மைத் தாங்கி, உண்மையின் ஊடகக் குரலாக நாம் ஒலிக்க துணை நிற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# குப்பைகளால் தொல்லை நாற்றமடிக்கும் சந்தை



சாவகச்சேரி, ஒக்.16

சாவகச்சேரி மீன் சந்தையின் பின்பகுதி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரின் குப்பை கொட்டும் பகுதியாக மாறியுள்ளதால் சந்தைக்கு வருபவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்கு போடப்படும் கழிவுக் குப்பைகள் தேங்கி காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குப்பைகளுக்குள் அதிகளவில் பொலித்தீன் பைகள் காணப்படுகின்றன. இவை காற்றுக்கு பரவி சாவகச்சேரி பொதுச்சந்தை வரை விரவிக் கிடக்கின்றன. மேலும் மழை காலத்தில் குறித்த பகுதியினூடாக பயணிக்க முடியாது துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர். மழை காலத்தில் பொலித்தீன் பைகளுக்குள் நீர் தேங்கி நுளம்புப் பெருக்கம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். நகரசபையினர் குப்பைகள் தேங்காமல் அதனை மீள் உற்பத்தி செய்தல் அல்லது உடனடியாக அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

# மகிழ்ச்சியில் திழைத்த ஆசிரியர் சங்கம்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

அதிபர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளையும், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளில் முதல் கட்டமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கான நிலுவைகளும் இம்மாதம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏனைய ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் பிரதம செயலாளர் உறுதியளித்த படி அடுத்த கட்டமாக வழங்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ)

# டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் டெங்கு ஒழிப்புத் தொடர்பான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை பருத்தித்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஏற்பாட்டில் குறித்த பிரதேசங்களில் காலை 7 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்போது விளக்கக் கூட்டங்களும் குறித்த பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.(உ)

# தூங்கிய சாரதி கவிழ்த்தார் 'பட்டா'வை

யாழ்ப்பாணம் - ஒக்.16

வவுனியா - ஈரற் பெரிய குளத்தில் நேற்று அதிகாலை வாகன விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி தேயிலை, வினாகிரி உள்ளிட்ட பொருட்களுடன் பயணித்த பட்டா ரக வாகனமே, வீதியை விட்டு விலகி மதகுடன் மோதி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் வாகனத்தின் சாரதி உட்பட இருவரே படுகாயமடைந்துள்ளனர்.



சாரதியின் தூக்கம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஈரற் பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

# நான் 'ரெடி!"

பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க மீதும் விசாரணைகள் நடத்தப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ஆணைக்குழுவுக்குத் தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும், விசாரணைக்கு வந்து விடயங்களைத் தெளிவுபடுத்த தான் தயாராக இருப்பதாக பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"அரசாங்கம் தொடர்பாகவோ அல்லது அரச அதிகாரிகள் தொடர்பாகவோ குற்றச்சாட்டு முன்வைப்படும் போது அரசாங்கம் அது குறித்து விசாரணை நடத்தி தேடி அறியும். அத்துடன் எதிர்காலத்திலும் இம்முறை கையாளப்படும் "எனவும் பிரதமரின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# கண்காணிப்பு எல்லைக்குள் 18+

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அடுத்த ஆண்டு வரிப் பொறுப்பு கண்காணிப்பு எல்லைக்குள் கொண்டு வரப்படவுள்ளனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில் வருமான வரியை இரட்டிப்பாக்கும் புதிய திட்டத்துக்கமைய இந்த நடைமுறை கொண்டு வரப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நடுன் குருகே,

"18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பற்றிய விபரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பேணவுள்ளது. அவர்களின் வங்கி பரிமாற்றங்கள், கொள்வனவுகள், கொடுப்பனவுகள் கண்காணிப்படவுள்ளன. இதற்காக, மோட்டார் போக்குவரத்து திணைக்களம், வங்கிகள், ஆட்பதிவுத் திணைக்களம், கடன் தகவல் பிரிவு, முதலீட்டுச் சபை உள்ளிட்ட 35க்கு மேற்பட்ட அரச நிறுவனங்களுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த கண்காணிப்பு பொறிமுறையின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு, தாமாக முன்வந்து வருமான வரி செலுத்தாமல் உள்ளவர்களுக்கு தகவல்கள் பரிமாறப்படும்"- என்றார். (எ)



# அரசியல் யாப்பில் மேலாதிக்க சிந்தனை

சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையின் அடிப்படையிலேயே இலங்கையின் புதிய அரசியலமைப்பு இடைக்கால அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சியில் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அரசியலமைப்புச் சபையின் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பான மக்கள் கருத்தறியும் கலந்துரையாடல் நேற்று மாலை 2.00 மணியளவில் நடைபெற்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமைதாங்கியிருந்தார். அங்கு கருத்துரைத்த மக்கள்,

"இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகம் நிராகரிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஓரிடத்தில் காட்டி இன்னொரு இடத்தில் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளே கூறப்பட்டுள்ளன. இது மாகாணங்களுக்கான சுயாட்சி அல்ல - என்றனர். (உ)

# இன்று நாளும் கோளும்

16.10.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 30 ஆம் நாள

| | | |
|---|---|---|
| துவாதசி பி.இ. 01.28 வரை | மகம் மு.ப. 8.11 மணி வரை | மரணயோகம் - அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை |
| இராகுகாலம் 07.32 - 09.02 | சுபநேரம் 12.02 - 01.32 | எமகண்டம் 13.32 - 12.02 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்சாகம் | பாசம் | விவேகம் | பக்தி | நலம் | தனம் | வரவு | உதவி | நட்பு | வெற்றி | மேன்மை | சிந்தனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கலாசாரம் அபாய நிலையில்





யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாணத்தினுடைய அடையாளம், கலாசாரம் வெள்ளையர் காலத்தில் இருந்ததை விட இன்றைக்கு அபாய நிலையில் இருக்கிறது என வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று யாழ் வடமராட்சி கரவெட்டி வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

"வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் வட பகுதியில் எமது கலாசாரமும், அடையாளங்களும் எவ்வாறு அழிக்கப்பட்டதோ அதைவிட மேலாக இன்று வடபகுதியில் எமது கலாசார அடையாளங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. எங்களுடைய அடையாளங்கள், கலாசாரங்கள் அழிக்கப்படுகின்ற நிலை, எங்களுடைய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு பொருளாதாரத்தில் நாங்கள் ஓரம் கட்டப்படுகின்ற நிலை, துப்பாக்கி முனையில் எங்களை அடக்கி வைத்துக்கொண்டு ஒரு குடும்பத்துக்கு ஒரு இராணுவம் என்ற நிலையில் எங்களை அடக்கி வைத்துக்கொண்டு இதை ஒரு சிங்கள பௌத்த பூமியாக மாற்றுகின்ற நிலையிலிருந்து நாங்கள் எங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அதற்காக நாங்கள் நவீனங்கள் என்று கூறிக்கொண்டு புதிய விடயங்களை உள்வாங்குவது தவறானதல்ல. ஆனால் எங்களுடைய பாரம்பரிய பண்புகளை மறந்து அதனை அழித்து விடக்கூடாது. அந்த வகையில் ஒவ்வொரு பாடசாலைகளும் எங்களுடைய கலாசாரங்களை, பண்பாடுகளை பாதுகாக்கின்ற பாடசாலைகளாக மாற வேண்டும்" என்றார். (உ)

# ஆப்பு!

கொழும்பு - ஒக்.16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகள் பறிக்கப்பட்டிருந்த நிலையில் மேலும் சிலரின் பதவிகள் விரைவில் பறிபோகவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் மத்துகம மற்றும் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர்களாக இருந்த குமார வெல்கம, மஹிந்தானந்த அளுத்கமகேவின் பதவிகள் பறிக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அத்துடன், அத்தனகல தொகுதியின் புதிய அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ச்சியாக பொது எதிரணிக்கு ஆதரவான அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் மேலும் சில அமைப்பாளர்களின் பதவிகளை விரைவில் பறிப்பதற்கு சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பிலான முடிவுகள் வெளியாகும் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (உ)

# தொண்டராசிரியருக்கு அநீதி?

## விளக்கம் கேட்டு கடிதம்

வவுனியா - ஒக்.16

தொண்டர் ஆசிரிய நியமன நேர்முகத் தேர்வில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோரிடம் விளக்கம் கோரி அவசர கடிதம் ஒன்றினை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

வடமாகாணத்தில் கடந்த பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வந்தவர்களை ஆசிரிய சேவையில் உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றிருந்தன.

இந் நேர்முகத் தேர்வில் 1046 பேர் தோற்றியிருந்த நிலையில் 676 பேர் நியமனம் பெற தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டு, அந்நியமனத்துக்கான மத்திய அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்தது.

இந்நிலையில் வடமாகாண கல்வி அமைச்சினால் 182 பேரே தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவித்து அவர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்ப்பதற்காக பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டன. நேர்முகத் தேர்வில் கேட்கப்பட்ட தகுதிகள், ஆவணங்கள் இருந்தும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த 25 தொண்டர் ஆசியர்கள் கடந்த 6 ஆம் திகதி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பில் விளக்கம் கோரியே வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ)

# முதலமைச்சரின் நக்கல்!

தனது உடல் நிலை பற்றி தவறான வகையில் தீபம் வார இதழில் எழுதப்பட்ட பத்தி குறித்து முதலமைச்சர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த குறிப்பு இது.

"தீபம்"பத்திரிகை யாரால் நடாத்தப்படுகின்றது என்பதை நான் அறியேன். எனினும் அதில் இன்று என்னைப் பற்றி வந்த செய்தி மிகவும் ஹாஸ்யமாக அமைந்திருக்கின்றது. "வைத்தியசாலையில் இருந்து மீண்டு வருவாரா விக்னேஸ்வரன்" என்றொரு கேள்வி கேட்கப்படுகின்றதென்றால் அது என் மீதான அனுதாபத்தில் அல்ல என்பது தெளிவு. வழக்கமாக "முதலமைச்சர் நோய்வாய்ப்பட்டுள்ளதாக அறிகிறோம். அவர் சீக்கிரமே உடல் நிலை தேறித் தமது கடமைகளை மீண்டும் நல்லபடியாக செய்ய இறைவன் அருள்புரிவாராக" என்றுதான் கூறுவார்கள்.

விக்னேஸ்வரனின் முடிவு இந்தா வந்துவிட்டது என்பது போல் இருக்கின்றது நம்மாழ்வாரின் நகைச்சுவைக் கட்டுரை. ஓடிக் கொண்டிருக்கும் வேளையில் காலில் முள் தைத்தால் தேங்கி நின்று முள்ளை பிடுங்கிவிட்டே ஓடவேண்டும். முள்ளைப் பிடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில் "இனி அவரால் ஓட முடியாது. இத்துடன் அவர் கதி அதோ கதிதான்" என்று கூறுவது போல் இருக்கின்றது இந்த சுவாரஸ்யமான கட்டுரை. இவ்வாறான சுவாரஸ்யமான ஹாஸ்யமிக்க கட்டுரையை என் படத்துடன் பிரசுரித்தமைக்காக தீபத்திற்கும் நம்மாழ்வாருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்! உங்கள் நகைச்சுவைக் கட்டுரைகள் தொடரவதாக!



# சாணக்கியச் சாணி

எல்லாந் தலை கீழாய்ப் போச்சு. என்ன செய்யிறம் எண்டு தெரியாமல் எல்லாத்தையும் செய்யிறது. பிறகு கேட்டால் "சொறி" சொல்றது. அதென்ன சொறி?....

சும்மா வாயிலை வந்தபடி புசத்திறான் இந்த வில்லங்கம் விநாசி எண்டு தயவு செய்து நினைக்காதையுங்கோ..... நாட்டு நடப்புகள் அப்பிடித்தானே நடக்குது.

போன சனிக்கிழமை தமிழ் தினக் கொண்டாட்டம். அதுவும் யாழ்ப்பாணத்துப் 'பெரிய்ய்ய்ய' பள்ளிக் கூடத்திலை... அண்டைக்கு ஜனாதிபதி மைத்திரி இஞ்ச வாறார்.வாறது தமிழ் தினத்தைக் கொண்டாட... வடிவாக் கேட்டுக் கொள்ளுங்கோ..! அப்ப நாங்கள் கறுப்புக் கொடி பிடிக்கிறம். கத்திறம். எதிர்க்கிறம். சனத்தையும் தமிழ்மொழித்தின விழாவைப் புறக்கணிக்கச் சொல்லுறம்.

இப்ப விளங்கிச்சோ காலம் தலைகீழாகிட்டுது எண்டு. நாப்பது, அம்பது வரியமா நாங்கள் என்னத்துக்குச் சிங்களவனோட மல்லுக் கட்டுறம். எங்கட தமிழுக்காகத் தானே. 'தலை கொடுத்தேனும் தமிழ் காப்போம்' எண்டுதானே பெடியள் கூட போராட வெளிக்கிட்டவங்கள். தமிழாராய்ச்சி மாநாட்டுக் கொலையள் தானே எங்கட ரத்தத்தைக் கொதிக்க வைச்சு,துவக்குத் தூக்க வைச்சது. தமிழைக் காக்கிறம் எண்டுதானே லைப்பிறரியை இரவோட இரவாக் கொளுத்தினவங்கள். சிங்கள் 'ஸ்ரீ' வேண்டாம்.தமிழ்தான் வேணுமெண்டு வாகனங்களை 'த' இலக்கம் போட்டு ஓடித் திரிஞ்சம்.

இப்ப என்னடாவெண்டால், அதே தமிழுக்காக நடக்கிற பெரிய நிகழ்ச்சியை நாங்களே எதிர்க்கிறம். அதுதான் சிங்களத்தின்ர கெட்டித்தனம். எங்கட கையைப் பிடிச்சே எங்கட கண்ணையே குத்த வைக்கிறாங்கள். எப்பவும் தாங்களே முன்னுக்கு நிண்டு எல்லாத்தையும் செய்தா, பழக்க தோசத்தில தமிழைக் கூட தமிழ் ஆக்களே எதிர்ப்பாங்கள் எண்டு அவங்களுக்குத் தெரியும். அதால தான் இப்பிடி ஒருநாளும் இல்லாத திருநாளா தேசிய தமிழ் விழாவை யாழ்ப்பாணத்தில கொண்டாடினவை.

இனி இப்பிடியே மாவீரர் நாளையும் அவங்கள் செய்தாலும் செய்யக்கூடும் . அப்பிடிச் செய்தா நாங்களே அதை வெறுக்கத் துடங்கிடுவம் எல்லோ. அதுதான் அவங்கட கணிப்பு. இல்லாட்டி என்ன கோதாரிக்கு இஞ்சத்த தமிழ் விழாவுக்கு இந்தியாவில இருந்து லியோனியைக் கூப்பிட்டு சினிமாப் பாட்டுப் பட்டிமன்றம் வைக்கினம்? சினிமாப் பாட்டில தான் தமிழ் வாழுதோ?

எல்லாம் நல்லதுக்கில்லை. தமிழங்களே தமிழ் விழாவை எதிர்க்கிறாங்கள் என்ட நிலையை சிங்களவன் உருவாக்கிப் போட்டான். அவங்களை மாதிரி நாங்களும் சாணக்கியமா நடக்காட்டி சாணியாத்தான் போவம் கண்டியளோ.

● வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மஸ்கெலியாவில் மண் சரிவு

மஸ்கெலியாவின் நேற்றுக் காலை சில இடங்களில் திடீரென மண்சரிவு ஏற்பட்டபோதும், தெய்வாதீனமாக எவ்வித உயிர்சேதங்களும் எற்படவில்லை.

ஹட்டனில் குடாகம பகுதியில், வீடொன்றின் மீது மண்மேடு ஒன்று வீழ்ந்ததில் தாயும், இரண்டு பிள்ளைகளும் காயமடைந்தனர். வீடும் பலத்த சேதத்துக்கு உள்ளானது.

குடா மஸ்கெலியா பகுதியில், ஹட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியில் உள்ள வீடொன்றை அண்மித்த பகுதியிலும் மண்சரிவு ஏற்பட்டது. இதனால் வீட்டின் ஒரு பகுதியும், மதிலும் சேதமடைந்தன. சரிவடைந்த மண், வீதியின் குறுக்காக மூடியதால் சிலமணிநேரம் அந்தப் பாதையூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதனால், அந்தப் பகுதியில் மேலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)





# பாய்ந்தது வாகனம் மூவர் வைத்தியசாலையில்

ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்புச் சந்தி பகுதியில் இன்று காலை வாகனம் ஒன்று 120 அடி பள்ளத்துள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது மூவர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் ஹட்டன் டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பின்னர் காயமடைந்தவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

# சிறுமிமீது துஷ்பிரயோகம்: தந்தைக்கு விளக்கமறியல்

சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தந்தை ஒருவரை 14 நாள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றின் 13 வயது சிறுமியின் நடத்தையில் சந்தேகம் அடைந்த தாயார் மூன்று தடவைகள் தனியார் மருத்துவமனையில் ஆலோசனை பெற்றிருக்கிறார். அங்கு சிறுமிக்கு உடல் பலவீனமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அதில் திருப்தியடையாத தாயார் வவுனியா அரச மருத்துவமனைக்கு கடந்த வியாழக்கிழமை சிறுமியை அழைத்து சென்று மருத்துவ பரிசோதனை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது குறித்த சிறுமி இரண்டு மாத கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது.


இதனையடுத்து, சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது தந்தையால் குறித்த சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஈச்சங்குளம் பொலிஸில் கடந்த வெள்ளிக்கிழமை தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த சிறுமியின் 39 வயதுடைய தந்தை நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (உ)

# மழையால் திறந்த வான்கதவு

கடந்த சில தினங்களாக மலையகத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக, மேல் கொத்மலை மின்சார நிலையத்துக்கு நீரேந்தும் பகுதியின் ஆற்று நீரின் மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்றுக் காலை திறந்து விடப்பட்டுள்ளது. எனவே, அணைக்கட்டுக்கு கீழ்ப் பகுதியில், ஆற்றைப் பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியாவில் 'விஷச் 'சுவரொட்டி!




மதப்பிரிவினையை உண்டு பண்ணும் வகையிலான சுவரொட்டிகள் வவுனியா நகரப் பகுதியெங்கும் ஒட்டப்பட்டதால் அந்தப் பகுதியில் ஒரு வித பரபரப்பு நிலை ஏற்பட்டது.

'இந்துத் தமிழர்களே! என்ற தலைப்புடன் ஒட்டப்பட்டுள்ள அந்தச் சுவரொட்டிகளில் "தீபாவளியை நமது இந்துத் தமிழ்க்கடைகளில் வாங்கிக் கொண்டாடுங்கள். பிறமதக் கடைகளில் பண்டிகைப் பொருட்கள் வாங்குவதைத் தவிருங்கள். இந்துத் தமிழ் வர்த்தகர்களே உசாராகுங்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவசேனா என்ற அமைப்பின் பெயரில் இந்தச் சுவரொட்டிகள் விஷக் கருத்துக்களுடன் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குற்றவாளிகளுக்கு தேர்தலில் வாய்ப்பில்லை

நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நபர்களுக்கு எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிப்பதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. அந்தக் கட்சியின் செயற்குழு இந்த முடிவை ஒருமனதாக எடுத்துள்ளதாக, இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பட்டார் குறிப்பிட்டுள்ளார். புத்தளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (உ)

# சைபர் குற்றம் புதிய சட்டம்



கொழும்பு, ஒக்.16

கணனிக் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளன. கணனி ஹெக்கர்கள் சைபர் தாக்குதல்களின் மூலம் இலங்கையை கேந்திர நிலையமாகக் கொண்டு மேற்கொள்ளும் குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது. வங்கி கணக்குகள் மீது சைபர் தாக்குதல் நடத்திய சம்பவங்கள் இரண்டு மட்டுமே இலங்கையில் பதிவாகியுள்ளன. பங்களாதேஷ் வங்கி மீதான தாக்குதல் மற்றும் அண்மையில் தாய்வானில் பதிவான தாக்குதல் என்பனவே இவ்வாறு பதிவாகியுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் இதற்கு முன்னதாக இடம்பெற்றது கிடையாது என்பதனால் வழக்குத் தொடர்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே புதிய சட்டங்களை உருவாக்கி கணனிக் குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (உ)

# மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி

யாழ்ப்பாணம் - ஒக்.16


வட மாகாணசபை உறுப்பினர் திரு. என். கனகரட்ணம் விந்தன் மண்டைதீவு மாணவர்களுக்கு இரண்டு இலட்சத்து முப்பது எட்டு ஆயிரம் ரூபாவுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்துள்ளார்.

மண்டைதீவு றோ.க.வித்தியாலயத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், அம்மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி வசீகரன் கபிலராணி மற்றும் மண்டைதீவில் இருந்து பல பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்கும் வறியநிலை மாணவர்களுள் என 17 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வு மண்டைதீவு றோ.க. வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் திரு. யோண் [illegible] தலைமையில் நேற்று நடைபெற்றது. (உ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அந்த நாள் ஞாபகம்.....!



**2006.10.16**

இலங்கையில் 1987 இல் இலங்கை– இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

# சோமாலியாவில் குண்டு வெடிப்பு

## 53 பேர் பலி: 60க்கும் மேற்பட்டோர் படுகாயம்



மொகதி, ஒக். 16

சோமாலியத் தலைநகரான மொகதிவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில், சுமார் 53 பேர் மரணமடைந்ததுடன், 60இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதியில் உணவகம் ஒன்றுக்கு வெடி பொருட்களுடன் வந்த வாகனம் ஒன்று வெடித்ததாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சோமாலியாவில் இதுவரை நடக்காத மிகப்பெரிய சக்தி வாய்ந்த ஒரு குண்டு வெடிப்பு இது எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. (இ)

# வைபர், வட்ஸப் பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை!



கொழும்பு, ஒக். 16

இலங்கையில் இணையத் தொடர்பாடல் செயலிகளான 'வைபர்', 'வட்ஸப்' என்பவற்றைப் பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசியில் வைபர், வட்ஸ் அப் செயலிகளைப் பயன்படுத்தும் போது அவற்றுக்கான தரவுகள் மற்றும் கடவுச்சொற்களை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என இலங்கை கணனி அவசரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வேறு நபர்களின் தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்திப் போலியான தொலைபேசிச் செயலிகள் இயக்கப்படுகின்றமை தொடர்பில் இதுவரை பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதற்கமைய இவற்றைப் பயன்படுத்தும்போது மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். இந்தப் போலிக் கணக்குகளைப் பயன்படுத்தி பல்வேறு குற்றங்களை மேற்கொள்ள முடியும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (இ)



# இந்தியா செல்கிறார் பிரான்ஸ் ஜனாதிபதி

புதுடில்லி, ஒக். 16

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச சூரியக் கூட்டமைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் இந்தியா செல்லவுள்ளார். சூரிய ஆற்றலை அதிகரிக்கும் திட்டமான சர்வதேச சூரியஒளி கூட்டமைப்பு திட்டம் கடந்த 2015இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் 121 உலக நாடுகள் இணைந்துள்ளன. டிசம்பர் 8 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை இந்தியாவில் மக்ரோன் தங்கியிருப்பார். இந்தியாவுக்கு மக்ரோன் செல்லவிருப்பது இதுதான் முதல்முறை. (இ)

# மெர்சல் சந்திப்பு





சென்னை, ஒக். 16

நடிகர் விஜயின் 'மெர்சல்' படத்துக்காக ஒட்டுமொத்த ரசிகர்களும் காத்திருக்கிறார்கள். தமிழர்களைப் பெருமைப்படுத்தும் சில காட்சிகள், விஜயின் மூன்று வேடம் என நிறையச் சிறப்புகள் இந்தப் படத்தில்.

ஆனால், வெளியீட்டுத் திகதி அறிவித்ததிலிருந்து ஒரே பிரச்சினைதான். எனினும், எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் மீண்டு படம் தீபாவளிக்கு நிச்சயம் திரைக்கு வரும் என்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று நடிகர் விஜய் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியைச் சந்தித்து கேளிக்கை வரியை நீக்கியதற்கு நன்றி தெரிவித்தார்.



# நவீன பாஞ்சாலிகள்

புதுடில்லி, ஒக். 16

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள ஒரு மலைக் கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆண் சகோதரர்கள் அனைவரும், ஒரு பெண்ணையே திருமணம் செய்யும் வழக்கம் இன்னும் நடைமுறையில் இருக்கிறது.

அதாவது, மகாபாரதத்தில் பாஞ்சாலிக்கு பாண்டவர்கள் கணவர்களாக இருந்ததுபோல இந்தக் கிராமத்தில் குறித்த நடைமுறை பேணப்பட்டுவருகிறது.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூன் அருகே உள்ள கிராமம் விராட்கை. பாண்டவர்களின் பதின்மூன்று ஆண்டு வனவாசத்துக்குத் தங்க உதவி செய்த விராட மன்னனின் பெயரால் தான் இந்த கிராமம் அழைக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கிராமத்தில், நிறைய பெண்கள் பாஞ்சாலியாகத்தான் உள்ளனர். உலகம் முழுவதும் வேறு வேறு கலாசாரத்தை பின்பற்றினாலும், புதுமைகளை வாய் பிளந்து பார்த்து வந்தாலும், ஒரு பெண் குடும்பத்தில் உள்ள அனைத்து சகோதரர்களையும் கணவராக ஏற்றுகொள்வதை நம்மால் சற்று ஜீரணிப்பது கடினம் தான். (இ)

# அசிட் 6 மாதச் சிறை



லண்டன், ஒக். 16

பிரிட்டனில் பொதுமக்கள் மத்தியில் அசிட் திரவத்துடன் நடமாடுபவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படவுள்ளது.

அண்மைக்காலமாக பிரிட்டனில் அசிட் வீச்சுத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு அசிட் திரவத்தை விற்பனை செய்வதைத் தடை செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு முதல் இந்த வருடத்தின் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் 21 சதவீதமானோர் அசிட் வீச்சினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)



# ஹாட்லிக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரீதியிலான தடகளப் போட்டியில் 18 வயது ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்வில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ரி.அபிசாந் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று தட்டெறிதல் போட்டிகள் நடைபெற்றன. இதன்போது அபிசாந் 39.59 மீற்றர் தூரத்துக்குத் தட்டை எறிந்தார்.

இதன்மூலம் அவர் மூன்றாம் இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கினார். (இ)

# 24 மில்லியனை மறந்த மனிதர்




நியூஜெர்சி ஒக். 16

லொத்தர் சீட்டில் 24 மில்லியன் டொலர் பரிசு விழுந்ததை மறந்த மனிதர் ஒருவர், கடைசி நேரத்தில் ஞாபகம் வந்ததால் பரிசைப் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் நியூஜெர்சியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரியான ஜிம்மி ஸ்மித் (வயது-68), கடந்த வருடம் லொத்தர் சீட்டு ஒன்றை வாங்கியிருந்தார்.

எனினும், பின்னர் அதை மறந்துவிட்டார். அதிர்ஷ்டவசமாக சீட்டு காலாவதியாகும் திகதிக்கு இரண்டு நாட்கள் முன்னதாக இணையத்தில் தற்செயலாகப் பார்த்தபோதே தனக்குப் பரிசு விழுந்திருப்பதை அறிந்துகொண்டார்.

இப்போது அவர் 24 மில்லியனுக்குச் சொந்தக்காரராகி விட்டார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆறாமிடம் வடக்குக்கு ஆறுதல்!

பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் 158 புள்ளிகளைப் பெற்ற வடமாகாணம் ஆறாம் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நடைபெற்று வந்த பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்டத் தடகளப் போட்டிகள், நேற்று நிறைவடைந்தன. இந்த போட்டிகளில் மாகாணங்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அவற்றின் நிலைகள் வெளியிடப்பட்டன.

இதனடிப்படையில் மேல்மாகாணம் (268 புள்ளிகள் ) மத்திய மாகாணம் ( 526 புள்ளிகள்) , வடமேல் மாகாணம்(438 புள்ளிகள்), சப்பிரகமுவ மாகாணம் ( 350 புள்ளிகள்), தென் மாகாணம் (347 புள்ளிகள்) , வட மாகாணம் (158 புள்ளிகள்), வடமத்திய மாகாணம் (57 புள்ளிகள்), ஊவா மாகாணம்(52 புள்ளிகள்), கிழக்கு மாகாணம் (38 புள்ளிகள்) என்பன முறையே 1-9 வரையான இடங்களைப் பெற்றுக் கொண்டன.

வடமாகாணம் இந்த வருடத் தடகளப் போட்டிகளில் 7 தங்கம் , 5 வெள்ளி, 5 வெண்கலம் என்று 17 பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-54)

## டி கொக்–அம்லா மிரட்டல்: பணிந்தது பங்களாதேஷ்



குயிண்டன் டி கொக், ஹசிம் அம்லா இணையின் அபார சதங்களின் உதவியுடன் பங்களாதேஷை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஊதித் தள்ளியது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்க- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பாடுத்தாடியது. அந்த அணி தென்னாபிரிக்காவுக்கு பலத்த சவாலைக் கொடுத்தது. பங்களாதேஷின் நட்சத்திர வீரரும், விக்கெட் காப்பாளருமான முஷ்பிகுர் ரஹீம் சதமடித்து அசத்த, 50 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் 7 விக்கெட்டுகள் இழந்து 278 ஓட்டங்களை எடுத்திருந்தது.

279 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 42.5 ஓவர்கள் நிறைவில் 282 ஓட்டங்களை எடுத்து சாதனை வெற்றியுடன் பங்களாதேஷைப் பந்தாடியது. குயிண்டன் டி கொக் 168 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 110 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். டி கொக் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (அ)

## சுப்பர் சிறைக்கு இன்று திறப்புவிழா

சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்-டுள்ள முதலாவது சிறைச்சாலை இன்று திறக்கப்படவுள்ளது. ஹம்பாந்தோட்டை அங்குனுகொலபெலெஸ்ஸவில் இச் சிறைச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகளுக்கும் பார்வையிட வருபவர்களுக்கும் உயர் சொகுசு வசதிகள் வழங்கும் வகையில் இந்தச் சிறைச்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்-ளமையால் இச்சிறைச்சாலை 'சுப்பர் சிறைச்சாலை ' என்று அழைக்கப்படுகின்றது.

சுமார் 9.5 பில்லியன் ரூபா செலவில் 658 ஹெக்டேயர் பரப்பில் நிர்மாணிக்-கப்பட்டுள்ள இச்சிறைச்சாலையானது இவ்வருடம் மார்ச்மாதம் ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் திறக்கப்படவிருந்த நிலையில் பிற்போடப்பட்டிருந்தது. சுமார் 1500 சிறைக்கைதி-களை இப்புதிய சிறைச்சாலையில் தங்க வைக்க முடியும். (உ)



## ஷாங்காய் கிண்ணம் பெடரர் வசம்

டென்னிஸின் ஆகச்சிறந்த வீரர்களுக்கிடையேயான இறுதிப் போட்டியில் தனது பரமவைரியான ரபேல் நடாலை 6-4, 6-3 என்று நேர் செட்களில் வீழ்த்தி சுவிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் ஷாங்காய் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றார்.

இதன் மூலம் மற்றொரு டென்னிஸ் மேதை இவான் லெண்டிலின் சாதனையான 94 சம்பியன் பட்டங்கள் என்ற சாதனையை பெடரர் சமன் செய்தார். (ஆ)

## ரணில், மைத்திரியோடு சம்பந்தரின் தீபாவளி



2017 ஆம் ஆண்டுக்கான தேசிய தீபாவளி விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன், அமைச்சர் டீ.எம் சுவாமிநாதன் உட்பட அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன்போது அனைத்து இந்துக்களுக்கும் ஜனாதிபதியும் பிரதமரும் தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்தனர். (அ)

## தொடர்ச்சிகள்

**அரசியல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் 'எதிரொலி'க்குக் கருத்துத் தெரிவித்த அவர், "நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கறுப்புக்கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது ஜனாதிபதி எங்களைச் சந்தித்தது குறித்து சிலர் விமர்சனம் செய்கின்றனர். அவர்கள் அரசியல் கைதிகள் சாகவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். நான் இவ்விடயத்தை மனிதாபிமானத்துடன் அணுகுகின்றேன். நாளை (இன்று) காலை உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் உறவினர்களை அனுராதபுரம் சிறைச்சாலைக்குக் கூட்டிச் சென்று, அதன்பின் அவர்களை கொழும்புக்கும் அழைத்துச் செல்லவுள்ளேன். அங்கு ஐ.நா. அலுவலர்கள், மனித உரிமைகள் பிரதிநிதிகள் உள்ளிட்டோரை தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் சந்திக்கவுள்ளனர்.

எமது வேண்டுகோளின்பேரில் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மதத் தலைவர்களும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி, ஜனதிபதிக்கு அவசரக் கடிதம் அனுப்பியுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினை 72 மணித்தியாலங்களில் ஒரு சுமூக நிலையை எட்டும் என நம்புகிறேன்." என்றார். (எ)

**"இலங்கை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போருக்குப் பின்னர் தான், இது ஒரு "சிங்கள பௌத்த நாடு" என்ற குரல் ஆவேசமாக ஒலித்து வருகின்றது. சரித்திரம் பிழையாக எடுத்துரைக்கப்பட்டு இந்த நாடு ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற பொய்யான, பிழையான, தவறான கருத்தை முன்வைத்து வருகின்றார்கள். வடகிழக்கு மக்கள் பெரும்பான்மையினர் பௌத்தர்கள் அல்லாதவர்கள். இப்போதிருக்கும் பௌத்தர்கள் கூட அரச உள்ளீட்டால் அண்மைக் காலங்களில் உள்ளேற்கப்பட்டவர்கள். ஆகவே இலங்கையைப் பௌத்த நாடென்றோ சிங்கள நாடென்றோ கூறுவதை நான் வலுவாக நிராகரிக்கின்றேன்" - என்றார். (எ)

**வடக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிப்பு விடயத்தை வைத்து பீதியை உருவாக்குவதற்குச் சிலர் இதனை மூலதனமாகப் பாவிக்கின்றனர். சாத்தியமானவற்றை சாதிக்கின்ற கலைதான் அரசியலாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றுத்தீர்வாக வட, கிழக்கு இணைப்புத் தொடர்பாகக் கூறியுள்ளதை அதில் தெரிவித்துள்ளார்கள். அது தமிழ் மக்களின் அபிலாசையாகும்.வட, கிழக்கு இணைப்பு பிரிப்பு பற்றி முஸ்லிம் காங்கிரஸ் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால், நாங்கள் தமிழர்களின் அபிலாசைகளுக்கு குறுக்காக நிற்கின்றோம் என்பதாகக் காட்டத் தேவையுமில்லை. நாங்கள் முஸ்லிம்கள், நடு நிலையானவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்." - என்றார். (எ)

**கலாமின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்போர் கூடத்தில் கலாமின் பிறந்ததின நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.யாழ். பொது நூலகத்தில் உள்ள இந்தியப் பகுதியில் உள்ள அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் அவரது பாரியார் மலர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வட மாகாண சபை அவைத் தலைவர் சி. வீ.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இந்தியச் சொற்பொழிவாளர் சுகி சிவத்தின் நினைவுப் பேருரையும் இடம்பெற்றன. (அ)


**பெண்களைத்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்றிருக்காத ஒரு சில பெண்களை மட்டுமே கடந்த காலங்களில் வேட்பாளர்களாக நிறுத்திவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## நீதி: தெற்குக்கு அப்படி எங்களுக்கு இப்படி!




# தேசிய தமிழ்மொழித் தின விழா–2017


• சிவபுராண நடனம்


• சீதை சுயம்வரம் நடன நாடகத்தில்...



தேசிய தமிழ்மொழித் தின விழா, நேற்றும், நேற்றுமுன்தினமும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வீல் சில பதிவுகள். (உ)

## மேடையில் மைத்திரி பூஜித நித்திரை



கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் சென்ற ஜனாதிபதி விசேட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றியபோது முன்வரிசையில் அமர்ந்திருந்த பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மெய்மறந்து நித்திரையாகி விட்டார். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகிவருகின்றன. (எ)

## சிறையில் மகிந்த!

ஜப்பானுக்கான தனது பயணத்தை இடைநடுவில் கைவிட்டு அவசரமாக நேற்றுக் காலை இலங்கைக்கு திரும்பினார் மகிந்த ராஜபக்ச. வந்ததும் வராததுமாக, உடனேயே தனது மகன் நாமல் ராஜபக்ச அடைத்து வைக்கப்பட்டுள்ள தங்காலை சிறைச்சாலைக்குச் சென்றார். கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிராந்தி, யோஷித ஆகியோரும், மகிந்தவோடு சேர்ந்து, நாமலைக் காணப் பறந்து சென்றனர். சிறையில் நாமலைச் சந்தித்து, ஆறுதல் கூறியதுடன், வீட்டில் இருந்து கொண்டு சென்ற உணவையும் நாமலுக்கு கொடுத்தார்.

அம்பாந்தோட்டையில் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்து, ஆர்ப்பாட்டம் நடத்தியதால், நாமல் ராஜபக்சவை ஒக்ரோபர்16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை தெரிந்ததே. (அ)


• சிறையை நோக்கி சிங்க நடை போடும் மகிந்த







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 16.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.